# சென்னையின் முக்கியப் பகுதிகளை அழகுபடுத்த நடவடிக்கை

## ஆணையர் ககன்தீப் சிங் பேடி

சென்னை, ஆக. 12: சென்னை விமான நிலையம் முதல் கத்திப் பாரா சந்திப்பு வரையும், அது போல் கோயம்பேடு மேம்பாலம் போன்ற முக்கியப் பகுதிகளையும் சர்வதேச நகரங்களுக்கு இணை யாக அழகுபடுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாநக ராட்சி ஆணையர் ககன்தீப்சிங் பேடி தெரிவித்துள்ளார்.

சென்னை மாநகரை அழகுப டுத்த மேற்கொள்ளப்பட வேண் டிய நடவடிக்கைகள் குறித்து சென்னை மெட்ரோ ரயில், மாநில நெடுஞ்சாலைத் துறை மற் றும் மாநகராட்சி அலுவலர்களு டனான ஆலோசனைக் கூட்டம் மாநகராட்சி ஆணையர் ககன்தீப் சிங் பேடி தலைமையில் வியாழக் கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஆணையர் ககன்தீப் சிங் பேடி பேசியது: சென்னை மாநகராட்சியுடன் 42 உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து மாநகர எல்லைகள் விரிவாக்கம் செய்யப்பட்டு 426 சதுர கி.மீ. பரப்பளவுள்ள மாநக ராக விரிவுபடுத்தப்பட்டுள்ளது. விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதி கள் உட்பட மாநகரின் பல்வேறு பகுதிகளில் உள்கட்டமைப்பு களை நவீன தொழில்நுட்பத்து டன் சர்வதேச தரத்துக்கு உயர்த் தும் வகையில் பல்வேறு திட்டங் கள் செயல்படுத்தப்பட உள்ளன.



பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகையின், முன்பகுதியில் மெட்ரோ ரயில் நிறுவனத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் அழகுபடுத்துதல் பணிகளை ஆய்வு செய்த, மாநகராட்சி ஆணையர் ககன்தீப் சிங் பேடி மற்றும் சென்னை மெட்ரோ ரயில் நிறுவன மேலாண்மை இயக்குநர் பிரதீப் யாதவ் உள்ளிட்டோர்.

அதன்படி, மெட்ரோ ரயில் பாலங்கள், மாநில நெடுஞ்சாலை கள், மாநகராட்சிப் பாலங்கள், சாலைகள் மற்றும் பூங்காக்கள் ஆகியவற்றை அழகுபடுத்த பல் வேறு நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டுள்ளன. இதன் முதல் கட்டமாக மாநகரின் முக்கிய பகுதிகளான விமான நிலையம் முதல் கத்திப்பாரா சந்திப்பு வரை யும், கோயம்பேடு மேம்பாலம், அண்ணா மேம்பாலம், மெரீனா கடற்கரை, மெட்ரோ ரயில் நிலை யத் தூண்கள், திருமங்கலம் மேம் பாலம் உட்பட மாநகரின் பல் வேறு பகுதிகளை சர்வதேச நகரங் களுக்கு இணையாக அழகுபடுத் தும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

இந்த இடங்களில் வண்ண ஓவி யங்கள் வரைதல், மரம், செடிகளை நட்டு பசுமையாகப் பராமரித்தல், வண்ண மின் விளக்குகளால் அழ குபடுத்துதல், முக்கிய சந்திப்புக ளில் செயற்கை நீரூற்றுகளை உரு வாக்குதல் போன்ற பணிகள் மேற் கொள்ளப்படும் என்றார்.

கூட்டத்தில் சென்னை மெட்ரோ ரயில் நிறுவன மேலாண்மை இயக்குநர் பிரதீப் யாதவ், துணை ஆணையர்கள் எம்.எஸ்.பிரசாந்த், விஷூ மஹா ஜன், டி.சினேகா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.